செ.வெ.எண் : 06 / ஜுலை நாள் : 04.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளைய வாக்காளர்களை அதிகளவில் பட்டியலில் சேர்த்திடும் வகையில் சிறப்பு முகாம் வருகின்ற 09.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.

## "பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுங்கள".

## வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்

இராமநாதபுரம் மாவட்டம், அரண்மனையில் இன்று (04.07.2017) விடுபட்ட வாக்காளர் மற்றும் இளைய வாக்காளர்களை அதிகளவில் பட்டியலில் சேர்த்திடும் பொருட்டு அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பேரணியைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசுகையில், "இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண் வாக்காளர்கள் 5,62,356 பேரும், பெண் வாக்காளர்கள் 5,62,266 பேரும், இதர வாக்காளர்கள் (திருநங்கைகள்) 70 பேரும் ஆக மொத்தம் 11,24,692 வாக்காளர்கள் உள்ளனர்.

மேலும், தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிகளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும் பொருட்டு இவ்வாண்டு ஜூலை 1 ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை சிறப்புப் பணி நடத்த இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்த சிறப்புப் பணியை எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் கருப்பொருளுக்கிணங்க அதிகளவில் இளைய வாக்காளர்களை குறிப்பாக 18-19 வயது குழுமத்தைச் சேர்ந்த வாக்காளர்களை பட்டியலில் சேர்க்க தற்போது நடைபெறும் தொடர் திருத்த காலத்தை வாக்காளர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்திட விரும்பும் வாக்காளர்கள் **படிவம் 6-னை** (குடியிருப்பு ஆதாரம் மற்றும் வயதிற்கான ஆதார சான்றுகளுடன்) முழுமையாக பூர்த்தி செய்து ஒப்பமிட்டு ஒரு வண்ண நிழற்புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் மற்றும் ஏற்கெனவே இடம் பெற்றுள்ளவர்கள் குறித்து ஆட்சேபணை செய்திட விரும்பும் வாக்காளர்கள் **படிவம் -7னை** பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் செய்திட விரும்பும் வாக்காளர்கள் **படிவம் -8னை** முழுமையாக பூர்த்தி செய்து, திருத்தம் கோரும் விபரங்களுக்கு உரிய சான்றுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். ஒரே தொகுதிக்குள் முகவரி மாறியவர்கள், புதிய குடியிருப்பு பகுதியில் வாக்காளராக பெயர் சேர்த்துக் கொள்ள விரும்பும் வாக்காளர்கள் **படிவம் 8ஏ-**னை பூர்த்தி செய்து, புதிதாக குடிபெயர்ந்த பகுதிக்குரிய குடியிருப்புச் சான்றிதழ் ஆதாரத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள படிவங்களை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க http://www.elections.tn.gov.in/eregistration என்ற இணையதள முகவரியைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். மேற்குறிப்பிட்ட விபரங்கள் குறித்த சிறப்பு முகாம் வருகின்ற 09.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும். பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ள வேண்டும் ," என்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியானது அரண்மனையில் துவங்கி வண்டிகாரத்தெரு, வட்டாட்சியர் அலுவலகம், கேணிக்கரை வழியாக சென்று அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ரா.பேபி, இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.நா.சண்முகசுந்தரம், துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.கல்யாணகுமார் உள்பட அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**